மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அன்றைய தினம் அந்தப் படம் வெளியானபோது, அந்தத் தியேட்டரில் ஒரு தலைமைக் காவலரும், நான்கு காவலர்களும் இருந்தார்கள். வெளியே ஆயுதம் தாங்கிய பத்து போலீசார் இருந்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தினார்கள் என்று தெரியவருகிறது.

அரசுப் பணியாளர் சங்கங்கள்

*** 150 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் ஊழியர்களில், எந்தெந்த ஊழியர்களுக்கு சங்கம் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது?

(இ) எந்தெந்த ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை?

(உ) அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) அரசு ஊழியர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. அரசு ஊழியர்களின் எத்தொகுதியினரும் சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை பெற்றவர் ஆவர். ஆனால் அத்தகைய சங்கங்களுக்கு, அரசு 'ஏற்பளிப்பு' (ரிகக்னிஷன்) வழங்க, அல்லது மறுக்க அரசுக்கு அதிகாரம் உண்டு 'ஏற்பளிப்பு' வழங்கும்போது, 21—11—1960-ம் நாள் வெளியிட்ட 1835-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை ஒப்புநோக்கி ஏற்பளிப்பு வழங்கப்படுகிறது. இதுவரை இம் மாநிலத்தில் எண்பது (80) பணியாளர் சங்கங்களுக்கு 'ஏற்பளிப்பு' வழங்கப்பட்டு உள்ளது.

(இ) & (உ) தமிழக அரசு சிற்றெழுத்தர் சங்கம், வாட்ச்மென் அசோசியேஷன், திருச்சி, இண்டியன் டெய்ரி டிப்ளமோ ஹோல்டர்ஸ் அசோசியேஷன் போன்ற சங்கங்களுக்கு அரசு 'ஏற்பளிப்பு' அளிக்கவில்லை. இதில் உள்ள உறுப்பினர்கள் குறைவாக இருந்ததாலும், இப் பகுதியினர் ஏற்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள பிற சங்கங்களில் சேர்ந்து தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொள்ள உரிமை இருப்பதாலும் இச் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஏறிக் கொண்டே வருவதால், படித்த சர்க்கார் சிப்பந்திகளும் தங்களுடைய உரிமைக் குரலைக் கிளப்புவதற்காக இருக்கக்கூடிய இந்த நேரத்தில் சங்கத்தை அங்கீகாரம் செய்யவில்லையென்பது ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. அந்த முட்டுக்கட்டை நிலையைத் தவிர்ப்பதற்காக எல்லாச் சிப்பந்திகளின் சங்கங்களையும் அங்கீகாரம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் இதுவரை 80 பணியாளர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் கூறியதை உறுப்பினர்

1970 மார்ச் 2]

அவர்கள் கவனிக்கவில்லை யென்று தெரிகிறது. அண்மையில், தமிழக அரசு சிற்றெழுத்தர் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் ஏற்பளிப்பு தேவையில்லை எனக் கருதி, அச் சங்கத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. வாட்ச்மென் அசோசியேஷன், திருச்சி, சங்கத்தில் 75 உறுப்பினர்கள் மட்டுமே இருப்பதாலும், ஏற்கனவே இவர்கள் ஏற்பளிப்பு அளித்துள்ள கடைநிலை ஊழியர் சங்கத்தில் சேர்ந்துகொள்ள உரிமை இருப்பதாலும் அனுமதி மறுக்கப்பட்டது. மற்றும் 'இண்டியன் டெய்ரி டிப்ளமோ ஹோல்டர்ஸ் அசோசியேஷன்' என்பதில் 52 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இவர்கள் அனுமதிக்கப்பட்ட என்.ஜி.ஜி.ஓ. யூனியன் மூலமாகத் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம். ஆகவே, அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

திரு. சி. கோவிந்தராசன்: அந்தச் சங்கங்கள் எல்லாம் எந்த அடிப்படையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? இரண்டாவது, அவர்கள் நீண்ட நாட்களாகத் தங்களுக்கு தொழிற் சங்க உரிமைகள் வேண்டும் என்று கோரி வருகிறார்களே, அந்த உரிமைகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்கென்று சில விதிமுறைகள் அரசாங்கத்தில் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் முழு விவரமும் என்னிடத்தில் இல்லை.

திரு. பெ. மலைச்சாமி: சில அரசு ஊழியர் சங்கங்கள் அரசியல் சங்கங்களாக மாறி வருகின்றன என்று பொதுமக்கள் கருதுகிறார்களே, அதைத் தடுத்தாக வேண்டியது அவசியமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி மாறி வருவதாகப் பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. அதை அரசு ஊழியர்கள் தான் தடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: டிரான்ஸ்போர்ட்டில் பணிபுரிகிற ஊழியர்கள் முதலில் தொழிலாளர்கள் என்று கருதப்பட்டு ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த ஹை பவர் கமிட்டி தன் அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையை மேசையின் மீது வைக்கவில்லை என்று சொன்னாலும் இப்போது அவர்கள் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதப்பட்டு—செகண்டு பே கமிஷனுக்கு விடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நான் கேள்வி தான் போடுகிறேன். ஒரு நிமிஷம் கூட அவகாசம் கொடுக்கவில்லை என்று சொன்னால் என்ன பயன்? டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதப்படாது தொழிலாளர்களாகக் கருதப்படுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சர்க்கார்ப் போக்குவரத்தில் அலுவல் புரிகின்றவர்கள் தொழிலாளர்களாகக் கருதப்படுவார்கள்.

DR. H. V. HANDE: Sir, is it a fact that a few representatives of the N.G.Os. met the Hon. Chief Minister and the Hon. Chief Minister did not treat them courteously ? Such a 'puhar' (complaint) has been made by them. Will he clarify whether that is true or not?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, அனுமதி வழங்கப்பட்ட சங்கங்கள், அனுமதி வழங்கப்படாத சங்கங்கள் பற்றியது தான். துணைக் கேள்வி மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டுமே தவிர எதைப்பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம் என்ற ரீதியில் போகக் கூடாது.

DR. H. V. HANDE: Will the Hon. Chief Minister clarify it?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் இதற்கு விளக்கம் கொடுத்துவிடுகிறேன். இதுபற்றி அன்றையதினமே திரு. மகா தேவன் அவர்கள் பேசும்போது விளக்கம் அளித்திருக்கிறேன். என்.ஜி.ஓ. சங்கப் பிரதிநிதிகள் என்னையும், அமைச்சர் அவையில் இருக்கின்றவர்களையும் சந்தித்து ஒரு மணிக்கும் மேலாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்து மணிக்கு நடக்க வேண்டிய காபினெட் மீட்டிங் கூட இந்தப் பேச்சு வார்த்தைகளால் தாமதப்பட்டு, 11 மணிக்கு மேல்தான் நடந்தது. அவர்கள் எந்த நேரத்தில் சந்தித்திருந்தாலும் நாங்கள் ஒருபோதும் அலட்சியப்படுத்தி அனுப்புவதில்லை. ஆணவமாகப் பேசி அனுப்புவதில்லை. அக்கறை காட்டாமல் இருந்ததும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனி துணைக் கேள்வி, மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டுமே தவிர எல்லாப் பொருள் பற்றியும் கேட்டு விடலாம் என்கிற போக்கை அனுமதிக்க முடியாது. கேள்வி 151.

திரு. கே. விநாயகம் : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நீங்கள் சொல்கிற விளக்கம் எங்களுக்கு நன்கு தெரியும். மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் அளிக்கிற விடையின் மீது உப கேள்வி போடுகிற உரிமை எங்களுக்கு இருக்கிறதா, இல்லையா ?

"இப்படித்தான் வருகிறதா என்னிடத்தில்"? என்று அமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ. சங்கத்தாரிடம் கூறியதாகக் கூறப்படுவது உண்மையா, இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர்தான் எழுப்பினார்கள். அதோடு நிற்க வேண்டும். மேலே விவரங்களுக்குப் போக வேண்டாம். அடுத்த கேள்வி 151.